முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

**வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**Provincial Education Department (NWP)**

| 15 | T | I |
|---|---|---|

| | | |
|---|---|---|
| තෙවන වාර විභාගය 2023 (2024)<br>மூன்றாம் தவணைப் பரீட்சை 2023 (2024)<br>Third Term Examination 2023 (2024) | ක්‍රිස්තු ධර්මය I, II<br>கிறிஸ்தவ சமயம் I, II<br>Cristianity I, II | 10 වන ශ්‍රේණිය<br>தரம் 10<br>Grade 10 |

| | | |
|---|---|---|
| පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>Three hours | අමතර කියවීම් කාලය<br>மேலதிக வாசிப்பு நேரம்<br>Additional Reading time | මිනිත්තු 10<br>10 நிமிடம்<br>10 minutes |

வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களை தெரிவு செய்வதற்கும் முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக.

## கிறிஸ்தவ சமயம் I

**கவனிக்க :**
1. **எல்லா வினாக்கருக்கும் விடை எழுதுக.**
2. **இலக்கம் 01 - 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**
3. **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் சரியான விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே (X) அடையாளமிடுக.**
4. **அவ்விடைத்தாளில் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றை பின்பற்றுக.**

01. தாவீதின் நகரம் என அழைக்கப்படுவது,
 1. சமாரியா  2. பெந்தானியா  3. பெந்தலகேம்  4. கானான்

02. இயேசுவின் பிறப்பின் போது யூத சமூகம்.
 1. அமைதியாய் இருந்தது  2. விடுதலையாய் இருந்தது
 3. இருளால் சூழப்பட்டிருந்தது  4. மகிழ்ச்சியாய் இருந்தது

03. "அவர்............குடும்பத்தின் மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவர்.
 1. ஏசாவின்  2. இஸ்மவேலின்  3. யாக்கோபின்  4. சவுலின்

04. "இதோ நான் என் தூதனை அனுப்புகிறேன் அவர் எனக்கு முன் வழியை ஆயத்தம் செய்வார்" என கூறிய இறவைாக்கினர் யார்?
 1. எரேமியா  2. மலாக்கி  3. ஆமோஸ்  4. செப்பனியா

05. இயேசுவின் சேவகத் தன்மையைக் குறித்து எத்தியோப்பிய நிதி அமைச்சருக்கு விளக்கி கூறியவர்?
 1. ஸ்தேவான்  2. பவுல்  3. பிலிப்பு  4. யோவான்

06. "எலியாவின் உளப்பாங்கையும் வல்லமையையும் உடையவராய் அவருக்கு முன் செல்வார்" இவ் வாக்கியத்துடன் தொடர்புடைய நபர்.
 1. பேதுரு  2. பவுல்  3. திருமுழுக்குயோவான்  4. பிலிப்பு

07. இயேசு பிறந்துள்ளதற்கான அடையாளமாக குழந்தையைத் தீவனத் தொட்டியில் கிடத்தி வைத்திருக்க காண்பீர்கள் என அறிவிக்கப்பட்டது.
 1. ஞானிகளுக்கு  2. பரிசேயருக்கு  3. ஏரோது அரசருக்கு  4. இடையருக்கு

08. யூதர் இறைவனைப் புகழ்ந்து பாடும் இடமாகக் காணப்படுவது,
 1. எருசலேம் ஆலயம்  2. தொழுகைக் கூடம்
 3. தலைமைக் குழுவின் இல்லம்  4. சாலமோன் மண்டபம்

X

09. உரோம ஆட்சியில் மற்றும் அடிமைத் தனத்தில் இருந்து ஜனங்களை மீட்டுக்கொள்ள யாரை ஜனங்களை மீட்டுக்கொள்ள யாரை ஜனங்கள் எதிர்பார்த்தனர்?
1. அரசன் 2. இராணுவத் தளபதி 3. ஆளுநர் 4. மேசியா

10. வானதூதர் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றிய கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாதவர்?
1. பரிசேயர் 2. வேதபராகர் 3. சதுசேயர் 4. எசேனியர்

11. யூதர்கள் தனது சகோதர ஜாதியரான சமாரியர்கள் என்று அறிமுகப்படுத்திய ஜனக்கூட்டத்தாரை தள்ளிவைத்ததற்கான காரணம்.
1. வேறு தெய்வங்களை வணங்கியதினாலேயே.
2. வேறு இனத்தாரோடு இணைந்ததினாலேயே.
3. வேறு மொழிகளை பேசியதினாலேயே.
4. வேறு இனத்தாருக்கு ஊழியம் செய்ததினாலேயே.

12. "எவனும் ஓய்வு நாளில் தன் எருதையாவது தன் கழுதையாவது தொழுவத்திலிருந்து அவிழ்த்துக் கொண்டுபோய் அதற்கு தண்ணீர் காட்டுகிறதில்லையா? இயேசு இவ்விதமாய் கேட்டது.
1. பக்கவதைக்காரனை சுகப்படுத்திய சந்தர்ப்பத்தில்
2. சீடர்கள் கற்பனையை உடைத்ததினால், பரிசேயர்கள் கேள்வி எழுப்பிய சந்தர்ப்பத்தில்.
3. ஓய்வு நாளில் கையில் பெண் இல்லாத மனிதனை சுகமாக்கிய சந்தர்ப்பத்தில்.
4. ஓய்வு நாளில் நீர்க்கோவை நோயாளி குணமடைதல்.

13. "அவரும் ஆபிரகாமின் குமாரனாவார்" இயேசு கிறிஸ்து அவர் என்று அறிமுகப்படுத்தியது யாரை?
1. மத்தேயு 2. பேதுரு 3. சகேயு 4. கெக்நேலியு

14. இயேசு கிறிஸ்துவுக்கு வந்த சோதனைகளில் பத்து கற்பனையில் வரும் கட்டளைக்கூடாக பதிலளித்தது,
1. முதலாம் சோதனையிலாகும். 2. இரண்டாவது சோதனையிலாகும்.
3. மூன்றாம் சோதனையிலாகும். 4. மேலுள்ள அனைத்துமாகும்.

15. இயேசு கிறிஸ்து வாழ்க்கை பலி எதிர்காலத்தில் நடப்பதாக உறுதிப்படுத்திய சம்பவமாவது,
1. ஈசாக்கை பலியிடச் சென்ற சம்பவம் 2. எருசலேம் பிரயாணத்திலாகும்.
3. சீடர்களின் பாதங்களை கழுவும் பொழுது 4. தேவாலயத்தை சுத்தம் செய்யும் போது

16. இயேசு கிறிஸ்துவுக்கு "தாவீதுவின் குமாரனே எனக்கு இரங்கும்" என்று கூப்பிட்டது.
1. கப்பர் நாகூமில் 2. எரிகோவில் பார்வை இல்லா மனிதனாவான்
3. பெத்லகேமில் 4. கெனசரேத்தில் பிசாசு பிடித்தவனாவான்

17. "நீரில் இருந்து எடுக்கப்பட்டவன்" என பெயர் வைக்கப்பட்டவர்?
1. தாவீது 2. யவீது 3. மோசே 4. தானியேல்

18. சீடர்கள் இடையில் விவாதம் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் இயேசு அவர்களின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காக பாவித்த மிகப் பொருத்தமான உவமையானது?
1. சிறுபிள்ளை 2. முத்து 3. புளித்தமா 4. விதவை பெண்

19. இயேசு கூறிய பெரிய விருந்து உவமையில் இரண்டாம் முறை அழைப்பு பெற்றவர்கள்.
1. பரிசேயர், சதுசேயர், ஏழைகள், முடவர்
2. மறைநூல் அறிஞர், ஏழைகள், சதுசேயர்
3. பரிசேயர், மறைநூல் அறிஞர், சதுசேயர், குருடர்
4. ஏழைகள், அங்கவீனர், குருடர்கள், முடவர்

20. இயேசு கற்பித்தற்கு இனங்க கிறிஸ்தவர்களாகிய நாம் நமது எதிரிகளை,
1. பகைக்க வேண்டும் 2. வஞ்சிக்க வேண்டும்
3. அன்பு செய்ய வேண்டும் 4. சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்

21. பதினெட்டு வருடமாக பெரும்பாடுள்ள பெண் இயேசுவிடம் குணத்தைப் பெற்றது.
    1. ஆபிரகாமின் மகளாக
    2. கடவுளின் மகளாக
    3. பாவி பெண்ணாக
    4. மரியன்னையாக

22. ஏரோது அரசன் இயேசுவை பிலாத்துவிடம் திரும்ப அனுப்ப காரணம்.
    1. தீர்ப்பளிப்பதற்கு ஏரோது மன்னனுக்கு அதிகாரம் இருக்காமை.
    2. இயேசு பிலாத்துவிடம் தீர்ப்பு கேட்டமை.
    3. இயேசுவிடம் எந்த தப்பும் காணாதபடியாகும்.
    4. இயேசு பிலாத்துவின் ஆட்சி பிரதேசத்திற்கு உட்பட்டிருப்பதால்.

23. "நீர் இறைவனின் கிறிஸ்துநாதர்" இவ்வாறு கூறியவர்?
    1. பவுல் 2. பேதுரு 3. மத்தேயு 4. யோவான்

24. இயேசு சிலுவையில் இருந்து கூறிய இறுதி வார்த்தை யாது?
    1. எருசலேம் பெண்களே எனக்காக அழ வேண்டாம்.
    2. தந்தையே உம்கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்.
    3. பிதாவே அவர்களை மன்னியும்.
    4. எல்லாம் முடிந்தது.

25. இயேசுவின் போதனையில் பிரதானமான நோக்கமானது,
    1. தேவ இராச்சியம் 2. கிறிஸ்தவ வாழ்க்கை
    3. இவ்வுலக வாழ்வு 4. மறு பிறப்பு

26. இயேசுவின் வாழ்வில் மிக முக்கிய நிகழ்வானது,
    1. போதனை 2. தியாகம் 3. ஞானஸ்தானம் 4. தோற்றம் மாறுதல்

27. எம்மாவூர் பயணத்தில் கலந்து கொண்ட சீடர்கள் இருவரும் உயிரோடு எழும்பிய இயேசுவைப் பற்றிய அனுபவத்தை தமது மற்றைய சீடர்களுக்கு எடுத்து கூறியது.
    1. ஆண்டவரை நாம் சந்தித்தோம்.
    2. ஆண்டவர் எம்மோடு பேசினார்.
    3. மெய்யாகவே ஆண்டவர் உயிரோடு எழுப்பப்பட்டார்.
    4. உண்மையாகவே ஆண்டவர் எம்மோடு பயணித்தார்.

28. யூத சமுதாயத்தில் "நெருப்பு" எதற்கு அடையாளப்படுத்தப்படுகின்றது?
    1. தீயை மூட்டும் சக்தி
    2. இறை பிரசன்னம் மற்றும் வல்லமை காட்டும் சக்தி
    3. தீமையை அழிக்கும் சக்தி
    4. இருளை நீக்கும் சக்தி

29. நீர் இவற்றை செய்வது எந்த அதிகாரத்தை கொண்டு என ஆசாரிய தலைவர்கள் இயேசு கிறிஸ்துவிடம் இவ்வாறான கேள்வி கேட்டதற்கான காரணம்.
    1. கெனசரேத்தில் பிசாசுகளை துரத்திய போது.
    2. தேவாலயத்தை சுத்தம் செய்யும் நேரத்தில்.
    3. யாவீருடைய பிள்ளையை சுகப்படுத்தும் நேரத்தில்.
    4. ஐயாயிரம் பேர்களுக்கு உணவு கொடுக்கும் நேரத்திலாகும்.

30. இயேசு கிறிஸ்து சுயத்தை சம்பூர்ணமாக வெறுத்தார் என்று சொன்ன கூற்று,
    1. என் சித்தமல்ல உன் சித்தப்படியே என்றாகும்.
    2. சோதனைக்குட்படாமல் ஜெபம் செய்தவர்கள் என்றாகும்.
    3. அவர்கள் அறியாமல் செய்யும் தப்பிதங்களுக்கு அவர்களை மன்னியும் என்றாகும்.
    4. உமது கரத்திற்கு என் ஆத்மாவை ஒப்பு கொடுக்கிறேன்.

31. இயேசுவின் மீது வைத்த நம்பிக்கையின் நிமித்தம் சுகமடைந்த இரு பெண்கள்.
   1. இரத்தப் போக்குடைய பெண், உடல் ஊனமுற்ற பெண்
   2. பேதுருவின் மாமி, யாயிரின் மாமி
   3. யாயிரின் மாமி, இரத்தப்போக்குடைய பெண்
   4. உடல் ஊனமுற்ற பெண், பேதுருவின் மாமி

32. "எனது நினைவாக இறைதல் செய்யுங்கள் என இயேசு கூறியது"
   1. யூதேய பாஸ்கா விழாவின் போதாகும்.
   2. கிறிஸ்தவ பாஸ்கா விழாவின் போதாகும்.
   3. கிறிஸ்தவ கட்டளைகளை கடைப்பிடித்தலின் போதாகும்.
   4. இறுதி பாஸ்கா விழாவின் போதாகும்.

33. இயேசு உயிர்ப்பித்த சம்பவமாக அமையாதது,
   1. யாயிரின் மகள்
   2. சிரியாவூர் நாமான்
   3. மார்த்தாளின் சகோதரன் இலாசர்
   4. நயீன் ஊர் விதவையின் மகள்

34. பாவத்தில் விழுந்த மனிதன் அதிலிருந்து மீண்டும் இரையரசினுள் வரும்போது இறைவன் அளவிலா அன்புடன் எதிர்பார்கிறார் எனக் கூறும் உவமை.
   1. விதைப்பவன் உவமை
   2. திராட்சை தோட்ட குத்தைக்காரர் உவமை
   3. காணாமல் போன மகள் உரிமை
   4. கடுகு விதை உவமை

35. மற்றவர்களுக்காக நம்மை அர்ப்பணித்து செயல்படுவது இறையரசின் பிரஜைகளின் சிறப்பான குணாதிசயமாகும், இதனைக் கூற இயேசு கூறிய உவமையாவது,
   1. விதைப்பவர் உவமை
   2. நல்ல சமாரியருடைய உவமை
   3. காணாமல் போன ஆட்டின் உவமை
   4. ஆயக்காரனும் பரிசேயனும் பற்றிய உவமை

36. இருவகை அடித்தளங்கள் பற்றிய உவமை மூலம் நாம் அறிவது,
   1. எமது வாழ்வை இறைவார்த்தை மீது கட்டியெழுப்ப வேண்டும்.
   2. வீடு கட்டும் போது பலமான அடித்தளம் இடவேண்டும் என்பதாகும்.
   3. எமது வாழ்விற்கு பல்வேறு புயல் வரும் என்பதாகும்.
   4. பலமற்ற அடித்தளத்துடன் வீடு கட்டினால் இடிந்து விழும் என்பதாகும்.

37. சொத்தை என்னோடு பங்கிட்டுக் கொள்ளுமாறு என் சகோதரனுக்குச் செல்லும் எனக் கூறியவருக்கு இயேசு கூறிய உவமையாவது,
   1. தனவந்தனும் லாசரும் பற்றிய உவமை.
   2. ஆயக்காரனும் பரிசேயனும் பற்றிய உவமை.
   3. பலன் கொடுக்காத அத்திமரத்தின் உவமை.
   4. அறிவற்ற செல்வனின் உவமை.

38. செமயோன் என்ற கிரேக்க சொல்லின் கருத்து யாது?
   1. தேவ தயவு
   2. தேவ பெலம்
   3. தேவ கிருபை
   4. தேவ ஈவு

39. கிறிஸ்தவர்களாகிய எமது வாழ்க்கைக்கு வெளிச்சமாவது,
   1. தீர்க்க தரிசனம்
   2. உவமை கதைகள்
   3. தேவ வசனம்
   4. செபம்

40. பிற இனத்தார் மத்தியில் நற்செய்தி அறிவித்தவர் யார்?
   1. பேதுரு
   2. யாக்கோபு
   3. பவுல்
   4. யோவான்

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

15 | T | II

තෙවන වාර විභාගය 2023 (2024)
மூன்றாம் தவணைப் பரீட்சை 2023 (2024)
Third Term Examination 2023 (2024)

ක්‍රිස්තු ධර්මය I, II
கிறிஸ்தவ சமயம் I, II
Cristianity I, II

10 වන ශ්‍රේණිය
தரம் 10
Grade 10

## கிறிஸ்தவ சமயம் II

- முதலாம் வினா உட்பட மேலும் நான்கு வினாக்களைத் தெரிந்து மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

(01) 1. மத்தேயு சுவிஷேத்தின் பிரகாரமாக இயேசுவின் பிறப்பின் முக்கியத்துவத்தை பிரதிபலிக்கும் அடையாளங்கள் இரண்டு தருக.
2. யூதர்களின் பஸ்கா பண்டிகையின் மூலமாக நினைவு கூறப்படும் வரலாற்று சம்பவத்தை சுருக்கமாக விளக்குக.
3. இறை அரசு அந்நியருக்காக திறந்து வைக்கப்பட்டிருக்கிறது என காண்பிப்பதற்கு இயேசு கூறிய உதாரணங்கள் 2 தருக.
4. உலக அரசில் வெளிக்காட்டப்படும் அடையாளங்கள் 2 தருக.
5. இறையரசின் கொள்கைகளை வெளிப்படுத்தும் உவமை கதைகள் 2 தருக.
6. இறையரசில் ஒருவன் பயணிப்பதினால் சந்திக்க நேரிடும் சவால்களுள் 2 தருக.
7. இறை அரசின் அங்கத்தவர்களுக்காக தலைமைத்துவத்திற்கான தகுதிகள் இரண்டைத் தருக.
8. இறைவாக்கினர்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புகள் யாவை?
9. யூதர்களால் பாவிகளாக கருதப்பட்டவர்கள் யாவர் உதாரணம் 2 தருக.
10. உரோம பேரரசிற்கு உட்பட்டிருந்த 2 பிரதேசங்களை தருக.

(02) 1. உரோம பேரரசினால் யூதர்கள் பட்ட இன்னல்கள் 2 தருக.
2. தற்கால சூழலில் மக்கள் எதிர்நோக்கும் இன்னல்கள் மூன்றை கூறி உதாரணத்தோடு விளக்குக.
3. மக்கள் நீதி சட்டங்களால் துன்பப்படுவதை கண்ட இயேசு அதை எதிர்த்து அதற்கு மாறாக நீதி சட்டத்திற்கு சவால் விடுத்த சந்தர்ப்பங்கள் 5 உதாரணத்தோடு தருக.

(03) 1. இறை அரசின் தலைமைத்துவம் சம்பந்தமாக இயேசு கூறிய 2 ஆலோசனைகளைத் தருக.
2. இயேசு சேவக தலைமைத்துவ முன்மாதிரிகளை எடுத்துக்காட்டிய சந்தர்ப்பங்கள் 3 தருக.
3. கிறிஸ்தவ பிள்ளையான நீர் சேவக தலைமைத்துவத்திற்கு முன்மாதிரியாக இருந்த சந்தர்ப்பங்கள் 5 கூறி விளக்குக.

(04) 1. இயேசுவின் வருகைக்கு தங்களை ஆயத்தப்படுத்தி காத்திருந்தவர்கள் 2 தருக.
2. இயேசு மீண்டும் வரும் வரைக்கும் இறையரசின் பணிக்கு அர்ப்பணித்தவர்களிடம் இருந்து அவர் எதிர்ப்பார்க்கும் விடயங்கள் 3 தருக.
3. கிறிஸ்தவப் பிள்ளையான நீர் இயேசுவின் இரண்டாம் வருகைக்கு எவ்வாறு ஆயத்தப்படுத்துவீர்? 5 விடயங்களை குறிப்பிட்டு விளக்குக.


(6) WWW.PastPapers.WiKi (5)
Download Term Test Papers, Short Notes From One Place!

(05) 1. இறையரசு என்றால் என்ன?
2. இறையரசின் வளர்ச்சியை வெளிக்காட்டுகின்ற 3 உவமைக் கதைகளை எழுதுக.
3. இறையரிசன் வளர்ச்சியை அறிவிப்பதற்கு உம்மால் செய்யக்கூடியவற்றை 5 காரணங்களைக் கொண்டு விளக்குக.

(06) 1. இறையரசின் அடையாளங்களாவன எவை?
2. இறையரசின் குடிகள் இயேசு மீண்டும் வரும் வரை பின்பற்ற வேண்டிய செயல்கள் 3 தருக.
3. இறையரசின் குடியுரிமையை எதிர்பார்க்கும் எல்லோரிடமும் இருக்க வேண்டிய குணாதிசயங்கள் ஐந்தினை விளக்குக.

(07) கீழ்வரும் தலைப்பில் ஏதாவது இரண்டு பற்றி சிறுகுறிப்பு எழுதுக.
1. தலைமகன் அர்ப்பணம்
2. இயேசுவின் திருமுழுக்கு
3. மன்னிப்பின் முக்கியத்துவம்
4. கொடுப்பதன் முக்கியத்துவம்

PAST PAPERS WIKI



(6) WWW.PastPapers.WiKi (6)
Download Term Test Papers, Short Notes From One Place!

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

15 T I,II

තෙවන වාර විභාගය 2023 (2024)
மூன்றாம் தவணைப் பரீட்சை 2023 (2024)
Third Term Examination 2023 (2024)

ක්‍රිස්තු ධර්මය I, II
கிறிஸ்தவ சமயம் I, II
Cristianity I, II

10 වන ශ්‍රේණිය
தரம் 10
Grade 10

# விடைப்பத்திரம்

## பகுதி – I

| | | | |
|---|---|---|---|
| 1. 3 | 11. 2 | 21. 1 | 31. 1 |
| 2. 3 | 12. 4 | 22. 3 | 32. 4 |
| 3. 3 | 13. 3 | 23. 2 | 33. 2 |
| 4. 2 | 14. 2 | 24. 2 | 34. 3 |
| 5. 3 | 15. 1 | 25. 1 | 35. 2 |
| 6. 3 | 16. 2 | 26. 4 | 36. 1 |
| 7. 4 | 17. 3 | 27. 3 | 37. 4 |
| 8. 2 | 18. 1 | 28. 2 | 38. 2 |
| 9. 4 | 19. 4 | 29. 2 | 39. 3 |
| 10. 3 | 20. 3 | 30. 1 | 40. 3 |

## பகுதி – II

01) 1. விஷேட நட்சத்திரம், ஞானிகளின் அன்பளிப்புக்கள் (பொன், வெள்ளி, வெள்ளைப் போளம்)

2. தேவன் இஸ்ராயேல் மக்களை எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்து மீட்டு மோசேயின் தலைமைத்துவத்தின் கீழ் கானான் தேசத்திற்கு அழைத்து வருதல்.

3. • எலியாவின் காலத்தில் சரிபாத்தின் விதவையின் கதை.
   • எலிசாவின் காலத்தில் சிரியா நாட்டின் நாகமானின் கனவு.

4. கல்வி அதிகாரம், ஆளுமை, சட்டதிட்டம், வரையறுக்கப்பட்ட நில அளவு.

5. காணாமல் போன ஆடு, காணாமல் போன காசு, காணாமல் போன மகன், திருமண விருந்து போன்றன.

6. அரசின் அழைப்பிற்குரிய சவால், இறை அரசின் அழைப்பிற்கு மாறுந்தரம் கொடுக்கும் சவால்.

7. • சமாதானத்துடன் ஒன்றிணைந்து செயற்படல்.
   • அன்பின் ஆளுமையை வெளிப்படுத்தல.

8. இறைவார்த்தையை பறைசாற்றல், மக்களை இறைவன் பக்கம் வழிநடத்தல்.

9. பெண்கள், நோயாளர்கள், ஊனமுற்றோர், வரிஅறவிடுவோர்.

10. யூதா, கலிலியோ



(2) WWW.PastPapers.WiKi (1)
Download Term Test Papers, Short Notes From One Place!

02) 1. அதிகமாக வரிவசூலித்தல், சுதந்திரம் இன்மை.
2. எழுதப்பட்ட விடைக்கு புள்ளி வழங்குக.
3. நோய்களை குணப்படுத்தல், பாவிகளை ஏற்றல் போன்ற விடைகள் இருப்பின் புள்ளி வழங்குக.

03) 1. • பெரியவனாக இருக்க விரும்புகிறவன் சிறியவனாக இருக்க வேண்டும்.
• தலைவன் சேவகனாக பணி புரிய வேண்டும்.
2. • சிறுபிள்ளையாக காணப்படுதல்.
• சேவை தேவைப்படும் இடத்திற்கு சென்று சேவை பெற்று கொடுத்தல்.
• சீடர்களின் பாதம் கழுவுதல்.
3. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக.

04) 1. விசுவாச ஊழியன், அவிசுவாச ஊழியன்
2. • எப்பொழுதும் அவருக்கு பணி செய்தல்.
• இறைவனின் ஊழியத்தை கனப்படுத்தல்.
• உலக ஆசைகளை துறத்தல்.
3. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக.

05) 1. இறைவனது ஆட்சி, அதிகார ஆட்சி, மக்கள் பூமி எல்லை, சட்டதிட்டம் அனைத்தும் இறைவனது ஆட்சிக்கு உட்பட்டது.
2. கடுகு, புளித்தமா, விதைப்பவன் உவமை.
3. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக.

06) 1. சுகமளித்தல், அசுத்த ஆவி விரட்டல், இயற்கைக்கு மேலான வல்லமை, மரணித்தோரை உயிரோடு எழுப்புதல்.
2. • கீழ்படிவான ஆயத்தத்துடனும், விசுவாசத்துடனும், பொறுப்புடனும் பணியாற்றுதல்.
• உண்மையாகவும், நேர்மையாகவும் மனமாற்றம் அடைதல்.
• இயேசுவுடன் ஆழமான தொடர்புக்குள் உள்ளாகுதல்.
3. • இறையரசின் பெறுமதியை புரிந்து செயற்படல்.
• அழைப்பிற்கு சரியான மாறுந்தரம் காட்டல்.
• தன் சிலுவையை சுமந்து செல்லல்.
• உலக சுகங்களுக்கு உட்படாது இருத்தல்.
• சாந்த குணத்துடன் பணியாற்றல்.

07) தலைப்பிற்கு பொருத்தமான விடை எழுதப்பட்டிருப்பின் புள்ளி வழங்குக.


(2) www.PastPapers.WiKi (2)
Download Term Test Papers, Short Notes From One Place!


LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න